செ.வெ.எண் : 49 /ஜூன் நாள் : 23.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## 2016-2017 நிதியாண்டில் பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்கிட முதற்கட்டமாக ரூ.355.28 கோடி மதிப்பில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (23.06.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:
இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மைச் சார்ந்த தோழமை துறைகளின் மூலம் பல்வேறு வேளாண் மேம்பாட்டு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2015-16ஆம் ஆண்டில் நெல் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ.3.75 கோடி மதிப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டு , விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. 21.06.2017 வரை 794 விவசாயிகளுக்கு ரூ.1.74 கோடி மதிப்பில் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல 2016-2017 நிதியாண்டில் பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் நெல் மற்றும் இதர வேளாண் பயிர்களுக்கு 1,17,542 விவசாயிகளுக்கு 1,12,981 ஹெக்டேர் பரப்புக்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மிளகாய் போன்ற தோட்டக்கலை விவசாயிகளுக்கு 10,044 விவசாயிகளுக்கு 8220 ஹெக்டேர் பரப்பிற்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2016-17 பயிர் காப்பீடு இழப்பீடு தொகையாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.1.65 கோடியும், கடன் பெறாத விவசாயிகளுக்கு ரூ.353.63 கோடியும் ஆக மொத்தம் ரூ.355.28 கோடி முதல் தவணையாக ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரைவில் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 4586 நீர்நிலைகள் உள்ளன. கண்மாய்கள் மற்றும் ஊரணிகளில் படிந்துள்ள வண்டல் மண்களை எடுத்து சாகுபடி நிலங்களில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டு இதுவரை 834 நீர்நிலைகளில் 9.86 லட்சம் கன அடி மண் எடுத்து 10473 விவசாய பயனாளிகளின் வயல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மைப் பணிகளுக்காக வண்டல் மண் தேவைப்படும் விவசாயிகள் இத்திட்டத்தினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

வேளாண்மை பொறியியல் துறை மூலமாக நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை திட்டம் (MSDA) நடப்பு ஆண்டில் 5000 எக்டேரில் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது. ஒரு தொகுப்புக்கு 1000 எக்டேர் என்ற அடிப்படையில் 5 தொகுப்புகள் நடப்பு ஆண்டில் 5 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மானாவரி நிலங்களை மேம்படுத்தி உற்பத்தியை நீடித்த நிலையான வகையில் பெருக்கி விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மொத்தம் 53 ஊரணிகள் தேர்வு செய்யப்பட்டு இதுவரையில் 20 ஊரணிகளில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுதவிர, குடிமராமத்து திட்டப்பணிகள்குண்டாறு வடிநிலக் கோட்டத்தில் 14 கண்மாய்களில் ரூ.100.60 லட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்து பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அனைத்து கண்மாய்களிலும் மராமத்து பணிகள் முடிவு பெற்றுள்ளன. முன்னாள் ஜமீன்தாரர்கள் கண்மாய்கள் கோட்டம், காரைக்குடி கட்டுப்பாட்டின் கீழ் திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரங்களில் 5 கண்மாய்கள் ரூ.47.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எனவே விவசாயத்தினையும், விவசாயிகளின் நலனையும் பாதுகாக்கின்ற விதமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அரிவாசன், கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் திரு.தி.மோகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வி.எஸ்.வெள்ளைச்சாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.ப.மு.முருகேசன், நபார்டு திட்ட பொது மேலாளர் திரு.மதியழகன் உள்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**